CHENNAI RAINBOW PRIDE
சென்னை வானவில் விழா 2025

தமிழ்நாடு வானவில் கூட்டணி
Tamil Nadu Rainbow Coalition

# சென்னை வானவில் சுயமரியாதை மாதம் 2025

## தமிழ்நாட்டில் LGBTIQA+ போன்ற பல்வேறு அடையாளங்களை உள்ளடக்கிய பாகுபாடற்ற தன்மையை ஆதரிப்போம்

வானவில் சுயமரியாதை பேரணி 2025 ஜூன் 29, ஞாயிற்றுக்கிழமை மாலை 3:30 மணிக்கு சென்னை எழும்பூர், ராஜரத்தினம் அரங்கத்தில் இருந்து தொடங்குகிறது. இந்த ஆண்டு 2025, சென்னை வானவில் சுயமரியாதை பேரணியின் 17வது ஆண்டாகும். நாங்கள் யார், யாரை நேசிக்கின்றோம் என்பதன் காரணமாக எங்களது உரிமைகளை மறுக்கும் இந்த சமூக விதிமுறைகளை மாற்றுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை இந்த மாதத்தில் மீண்டும் உறுதி ஏற்கிறோம். இரு பாலின வரையறைகள், ஆணாதிக்கம் மற்றும் பாலின பாகுபாடுள்ள விதிமுறைகளில் வேரூன்றிய ஒடுக்குமுறை, நம் வீடுகளில் தொடங்கி, கல்வி மற்றும் சுகாதார அமைப்புகள், வேலைவாய்ப்பு மற்றும் பொது இடங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தொடர்கிறது. வானவில் சுயமரியாதை மாதம் என்பது எங்களது இருப்பு, கண்ணியம் மற்றும் சுயமரியாதையை சமுதாயத்திற்கு பறைசாற்றுவதற்கும், மேலும் முழுமையான குடிமக்களாக வாழ்வதற்கான எங்களது உரிமைகளை உணர்வதற்குமான ஒரு வழியாகும்.

தமிழ்நாட்டில் உள்ள பால்புதுமையர் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் என்ற முறையில், நாங்கள் திருநர் சமூகத்தை மேம்படுத்த தமிழ்நாடு அரசு எடுத்த நடவடிக்கைகளை பாராட்டுகிறோம்.

மேலும், நாங்கள் நமது மாநிலத்தில் பின்வருபவற்றை செயல்படுத்தக் கோருகிறோம்:

1. திருநங்கைகள், திருநம்பிகள் மற்றும் இடைபாலர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் (தனியார் மற்றும் பொதுத் துறை)

கிடைமட்ட இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தி செயல்படுத்த கேட்டுக்கொள்கிறோம்.

2. மாறிய பாலினம் மற்றும் மாற்று பாலீர்ப்பு கொண்ட பால்புதுமையர் மக்களால் (LGBTIQA+ உறுப்பினர்களால்) உருவாக்கப்பட்ட மாறிய பாலினம் மற்றும் மாற்று பாலீர்ப்பு கொண்ட சிறுபான்மையினர் கொள்கையினை அரசு இறுதி செய்து வெளியிட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
3. திருநங்கையர் நல வாரியத்தின் பெயரினை "திருநங்கை-திருநம்பி நல வாரியம்" அல்லது "திருநர் நல வாரியம்" என்று பெயர் மாற்ற கேட்டுக்கொள்கிறோம்; ஏனெனில் தற்போதைய பெயரிலுள்ள "திருநங்கை" என்பது திருநங்கைகளை மட்டுமே குறிக்கிறது, திருநம்பிகளை உள்ளடக்கவில்லை.
4. தற்போது திருநங்கையர் நல வாரியத்தில் ஒரு திருநம்பி மற்றும் ஒரு இடைபாலர் மட்டுமே உள்ளனர். திருநம்பிகள் மற்றும் இடைபாலர்களின் பிரதிநிதித்துவத்தை திருநங்கையர் நல வாரியத்தில் அதிகரிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், இது இந்த அதிக விளிம்புநிலை சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வர உதவும்.
5. தமிழ்நாடு அரசு திருநங்கைகளுக்கு வழங்கும் சமூக நலத் திட்டங்கள் அனைத்தும் திருநம்பிகள் மற்றும் இடைபாலர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். "திருநங்கை" என்பது அனைத்து திருநர்களையும் உள்ளடக்கிய சொல் அல்ல, ஏனெனில் இது திருநங்கைகள் மற்றும் பிற மாற்று பெண்மை கொண்ட நபர்களை மட்டுமே குறிக்கிறது என்பதை அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுக்கு மேலும் நினைவூட்டுகிறோம்.
6. தன்பாலீர்ப்பு கொண்டவர்களின் உறவுகளை அங்கீகரிப்பதற்கான குடும்ப இணைப்புச் சட்டம் அல்லது அதற்கு இணையான

வழிமுறைகளை அரசு செயல்படுத்துவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

7. திருநங்கைகளுக்கான தங்குமிடங்கள் அமைக்கப்பட்டதை நாங்கள் பாராட்டுகிறோம், ஆனால் திருநம்பிகள் மற்றும் இடைபாலர்கள் உள்ளடக்கிய திருநர் தங்குமிடங்களை அமைக்க கேட்டுக்கொள்கிறோம்.
8. பராமரிப்பு மற்றும் ஆதரவு தேவைப்படும் பாலின அடையாளங்களுடன் ஒத்துப்போகாத குழந்தைகளுக்கான தங்குமிடங்கள் மற்றும் சட்டத்திற்கு முரண்படும் குழந்தைகளுக்கான கூர்நோக்கு இல்லங்களை அரசு நிறுவ வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
9. தத்தெடுப்பு மற்றும் வாடகைத் தாய் சம்பந்தப்பட்ட சட்டங்களில் திருத்தம் செய்து, மாறிய பாலினம் மற்றும் மாற்று பாலீர்ப்பு கொண்ட பால்புதுமையர் மக்களுக்கான (LGBTIQA+ மக்களுக்கான) உரிமைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.
10. தமிழ்நாட்டில் உள்ள திருநர் மருத்துவமனைகள், திருநர்களின் கண்ணியம் மற்றும் செயலாண்மையை மதிக்கும் தரப்படுத்தப்பட்ட, வாடிக்கையாளரினை மையப்படுத்தப்பட்ட அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும், சுய உறுதி செய்யப்பட்ட பாலின அடையாளத்திற்கு, உளவியல் முறைப்படி நிர்ணயத்தின் ஒரு பகுதியாக பிறப்புறுப்பு பரிசோதனை தேவையில்லை, மேலும் 18 வயதுக்கு மேற்பட்ட திருநம்பிகளுக்கு பாலின உறுதிப்படுத்தும் சிகிச்சை செய்ய பெற்றோரின் சம்மதத்தைப் பெற கேட்கக் கூடாது. பிறப்புறுப்பு வழியாக மேற்கொள்ளப்படும் நெறிமுறையற்ற மற்றும் அறிவியலுக்குப் புறம்பான நடைமுறைகள் மருத்துவமனைகளில் தொடர்கின்றன, அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.
11. தமிழ்நாடு அரசு மத்திய ஆலோசனைகளை செயல்படுத்துவதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்:

a. குயர் உறவில் உள்ள இணையர்கள் குடும்ப (ரேஷன்) அட்டை பெறும் நோக்கங்களுக்கு ஒரே குடும்பமாக கருதப்பட வேண்டும். மேலும், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் குயர் உறவில் உள்ள இணையர்களுக்கு குடும்ப (ரேஷன்) அட்டை வழங்குவதில் எந்தவித பாகுபாடும் காட்டப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.
b. குயர் நபர்கள் கூட்டு வங்கிக் கணக்கைத் திறக்கவும், குயர் உறவில் உள்ள இணையரில் ஒரு நபரை வாரிசாக (நாமினியாக) நியமிக்கும் அரசாணையை வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

12. பெயர்/பாலின மாற்றம், திட்டங்கள் போன்றவற்றைப் பெறுவதற்கு மாநில அடையாள அட்டையுடன் தேசிய திருநர் அடையாள அட்டையினையும் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற நிறுவனங்கள் மற்றும் துறைகள் அங்கீகரிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
13. தங்கள் தேசிய திருநர் அடையாளச் சான்றிதழில் "T" என்ற பாலினக் குறியீட்டைக் கொண்டவர்களுக்கு மட்டுமல்லாமல், "M" அல்லது "F" என்ற பாலினக் குறியீட்டைக் கொண்டவர்களுக்கும் திருநர்களுக்கான அரசுத் திட்டங்கள் மற்றும் சேவைகளை பெற தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
14. சுஷ்மா vs. காவல்துறை ஆணையர் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கல்வி நிறுவனங்களின் ஊழியர்களுக்கு (ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாதவர்கள்) மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளியிலுள்ள பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டங்களைப் பயன்படுத்தி குயர் (LGBTIQA+) மக்கள் மற்றும் பாலின வேறுபாடு கொண்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் பிரச்சினைகள் குறித்து

பயிற்சி அளிக்க வேண்டும், உண்மையில் இது போன்ற எந்த விழிப்புணர்வும் நடைபெறவில்லை, இருப்பினும் சென்னை உயர் நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்ட அறிக்கைகளில் 1,00,000 பேர் மெய்நிகர் பயிற்சி மூலம் விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

15. தற்கொலை எண்ணங்கள் மற்றும் தற்கொலைகள் உட்பட குயர் மக்கள் எதிர்கொள்ளும் மனநலப் பிரச்சினைகளை கையாள வேண்டும். தமிழ்நாடு மாநில மனநல ஆணையத்தால் உருவாக்கப்பட்ட குயர் மக்களுக்கான மனநலக் கொள்கை இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
16. குயர் மக்களின் (LGBTIQA+) பிரச்சினைகள் குறித்து நுட்பமான அணுகுமுறையில் ஊடகம் அணுக வேண்டும் என்றும், அரசு அங்கீகரித்த சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்; மேலும் சமூக ஊடகங்களில் இடம்பெறும் வெறுப்புப் பேச்சுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம், மேலும் புகார்களின் அடிப்படையில் காவல்துறையினர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
17. பல்வேறு அடையாளங்களை உள்ளடக்கிய பணியிடக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உறுதி செய்வதிலும், பெருநிறுவன சமூகப் பொறுப்புணர்வு நடவடிக்கைகளின் மூலம் குயர் சமூக முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதிலும் தனியார் துறையின் ஆதரவை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
18. பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் உள்ள கழிப்பறைகள், விடுதிகள் மற்றும் இதர வசதிகளில் ஆண் மற்றும் பெண் விருப்பத்தேர்வுகளுடன் பாலின-நடுநிலை விருப்பத்தேர்வினையும் சேர்க்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மக்கள் தங்களது பாலின

அடையாளங்களுக்கு மிகவும் பொருத்தமான வசதிகளைப் பயன்படுத்த சுதந்திரமாக இருக்க வேண்டும்.

19. மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்தில் கவனம் செலுத்தும் மக்கள் ஆரோக்கியம் நல்வாழ்வு நிகழ்ச்சிகளில் மாதவிடாய் ஏற்படும் திருநம்பிகள் மற்றும் பாலின ஈர்மறைக்கு அப்பாற்பட்டவர்களை அங்கீகரிப்பதுடன் தங்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் திட்டங்களிலும் சேர்க்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
20. சட்டம், உளவியல், சமூக பணி, செவிலியர் பயிற்சி மற்றும் பிற துறைகளின் பாடத்திட்டங்களில் பல்வேறு அடையாளங்களை (LGBTIQA+) உள்ளடக்கிய உள்ளடக்கம் விரிவாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
21. திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 2019 யின் படி ஆண், பெண் அல்லது திருநர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடைமுறைகள் மற்றும் சட்டத்தின் 7வது பிரிவின் கீழ் இரு பாலினத்திற்குள் (2020 இன் இறுதி விதிகளின்படி) அடையாளம் காண அறுவை சிகிச்சை அல்லது உடல் பரிசோதனை தேவையில்லை என்பது குறித்து மாநிலம் முழுவதும் உள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.
22. பாலினம், பாலீர்ப்பு, வர்க்கம், சாதி, குறைபாடுகள், இனம், மதம் மற்றும் பிற காரணிகளின் அடிப்படையில் சமூக அநீதியை எதிர்த்து நாடு முழுவதும் மற்றும் உலகளவில் போராடுபவர்களுக்கு நாங்கள் எங்கள் ஒற்றுமையை நீட்டிக்கிறோம்.

---

நாங்கள் யார்: **தமிழ்நாடு வானவில் கூட்டணி** என்பது LGBTIQA+ போன்ற பல்வேறு அடையாளம் கொண்ட நபர்கள் மற்றும் ஆதரவாளர்களின் முறையான மற்றும் முறைசாரா குழுக்களின் வலையமைப்பு ஆகும், இது ஆண்டுதோறும் வானவில் சுயமரியாதை பேரணி மற்றும் அது தொடர்புடைய நிகழ்வுகளை ஏற்பாடு செய்கிறது.

தொடர்புகள்: சகோதரன்: +91 98418 65423